NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 AL
Week End Classes
பிரிவு II
ஆரம்பமாகி விட்டது
7.30 - BOTANY
8.30 - ZOOLOGY
9.30 - CHEMISTRY
10.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

பக்கங்கள் ஆறு

Adut. 28-7

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
AL 91
(Week end Classes)
பிரிவு I க்கான
வகுப்புகள்
நடைபெறுகின்றன.
7.30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - HEMISTRY
11.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

சுடர்: 4 சுக்கில ஞூ ஆடி மீ 32 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 13 ( 16 - 08 - 1989 ) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 218

# புதுடில்லி யோசனைகள்; மீளாய்வு அவசியம்!

## ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, ஆகஸ்ட். 16

அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்ட இந்திய அரசின் யோசனைகளை மீளாய்வு செய்ய வேண்டியது அவசியமாகின்றது. —இவ்வாறு இலங்கை ஜனாதிபதி திரு. ஆர், பிரேமதாஸா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்,

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின் இறைமையில் சிறிதளவேனும் பாதிப்பு ஏற்படும் வகையில் நாம் நடந்து கொள்ளக் கூடாது:

உண்மை நிலையைக் கருத்திற் கொண்டு, நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் பூரண அமைதியை நிலைநாட்ட சகல வித நடவடிக்கைகளும் மேற்கொள்வது அவசியமாகும்:

வடக்கு, கிழக்கில் வாழும் எல்லா இன மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், சிவில் நிர்வாகத்தை மீண்டும் அங்கு ஸ்தாபிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

இந்தியப் படைகள் கூடிய விரைவில் விலக்கப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்:

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் சகல இன மக்களிடையே ஒற்றுமையும் சமாதானமும் ஏற்படத் தடையாக உள்ள சகல அம்சங்களும் நீக்கப்பட வேண்டும்:

இந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதை நிச்சயிக்கும் வகையில் புதுடில்லிப் பிரேரணைகளை மீளாய்வு செய்வதற்கு நான் அயராது உழைத்து வருகின்றேன்;

அதன் பின்னர் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும்:

அதற்கிடையில், சமாதானம் ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கும் வன்முறைகளிலும் உணர்ச்சியூட்டும் செயல்களிலும் ஈடுபடாதிருக்கும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்:

-இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்; (உ-எ)

## ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம் பரவுகிறது

ஆஸ்பத்திரி ஊழியர்களின் வேலை நிறுத்தம் பரவி வருகிறது.

களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆஸ்பத்திரி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்:

கொழும்பு ஆஸ்பத்திரிகளின் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நேற்று ஐந்தாவது நாளாக நீடித்தது; (உ-எ)

## வல்வைப் பகுதிகளுக்கு முதலமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 16

வல்வெட்டித்துறைப் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ; வரதராஜப்பெருமாள் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டார்;

இது தொடர்பாக யாழ்; மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு: அ: முருகநேசன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடக்கு, கிழக்கு மாகாண அரசின் முதலமைச்சர் அ: வரதராஜப்பெருமாள், இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்கள், வெளிநாட்டு பத்திரிகையாளர் உட்பட பலர் திங்கட்கிழமை காலை வல்வெட்டித்துறைக்குச் சென்று இந்திய அமைதிப் படையினரை மறைந்திருந்து தாக்கியமையால் ஏற்பட்ட மோதலில் பாதிக்கப்பட்ட இடங்களையும், மக்களையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

[16 - 8 - 1989]

ஆடி 32 — புதன்கிழமை நக்ஷத்திரம்; திருவோணம் சுபநேரம்;

04-35 முதல் 06-05 வரை ராகுகாலம்;

12-05 முதல் 01-35 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

பூரணை விரதம்

## மலையகத் தோட்டங்களில் தொண்டர்படை அமைக்க தொண்டமான் வலியுறுத்து!

மலையகத் தோட்டத்தொழிலாளருக்குப் பாதுகாப்பு வழங்க தொண்டர் பாதுகாப்புக் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் ஆலோசனை கூறியிருக்கிறார்:

ஒவ்வொரு தோட்டத்திலுமிருந்து பத்து தொண்டர்கள் விதம் தெரிவு செய்யப்பட்டு இத்தொண்டர்படை அமைக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்:

மலையகத்தில் பல தோட்டங்களுக்கு அமைச்சர் கடந்த வார இறுதியில் சென்று பல கூட்டங்களில் பேசினார். அப்போது இத்திட்டத்தை வலியுறுத்தினார்; (உ-எ)

## இடைக்காடு பகுதியில் மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக 16

அச்சுவேலி, இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது;

இரு குழுக்களுக்கு இடையே நடந்த இம் மோதலின்போது உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என அறியப்படுகிறது:

அப் பகுதியில் தீயினால் சில வீடுகள், வேலிகள் நாசமாகின; (ஒ-11)

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி திரு. ஆர்: பிரேமதாசவை தினேஷ் குணவர்த்தன பிரின்ஸ் குணசேகரா ருக்மன் சேனநாயக்கா சோபித்த தேரர். மொரட்டுவே ஆனந்த தேரர் ஆகியோர் சந்தித்தனர்.

நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டில் தற்போது எழுந்துள்ள நிலைமை குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ-21)

## தென்பகுதி நேற்று முழு அளவில் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஆக 16

கொழும்பு நகரமும் தெற்கில் ஏனைய சில பகுதிகளும் நேற்றுவெறிச்சோடிக் காணப்பட்டன.

வர்த்தக நிலையங்கள், வங்கிகள் தொழிற்சாலைகள் அரச அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன;

ரயில்கள் ஓடவில்லை; பஸ்கள் சில இராணுவத்தினரின் பாதுகாப்புடன் ஓடின:

கண்டி நகரிலும் முழு அளவில் வேலைநிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது; நகரில் மக்கள் நடமாட்டமே காணப்படவில்லை;

காலி நகரிலும் இதே நிலை காணப்பட்டது;

இந்திய சுதந்திர தினத்தையொட்டி நேற்று வேலைநிறுத்தம் மேற்கொள்ள ஜே.வி.பி; இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது; (உ-எ-க)

## அதிகாரப் பரவலாக்கல்; புதுடில்லியில் திட்டம்

திருகோணமலை, ஆக: 16

அரசமைப்பின் பதின்மூன்றுவது திருத்தத்திற்கு அமைய தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் திட்டமொன்றைத் தாங்கள் புதுடில்லியில் தயாரித்திருப்பதாக வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு; அ: வரதராஜப் பெருமாள் தெரிவித்திருக்கிறார்:

இதன் பிரதி ஒன்றை தாங்கள் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்ப இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுடில்லியிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை திரும்பிய அவர் திங்களன்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்:

அந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது :-

இந்தியப் பிரதமர், பாது

( 6ஆம் பக்கம் பார்க்க)

## யாக்கருவில் ஷெல் தாக்கு பெண்மணி ஒருவர் மரணம்

கரவெட்டி, ஆ: 16

யார்க்கரு, கலிகை முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் அசம்பாவிதங்கள் இடம்பெற்றன:

முதலில் முகாம்களை நோக்கி தாக்குதல்கள் நடந்ததாகவும் அவற்றை அடுத்துப் பதில் தாக்குதல்கள்இடம்பெற்றன; ஷெல் வீச்சுக்களும் இடம்பெற்றன.

இச் சம்பவத்தில் யார்க்கருவைச் சேர்ந்த பெண் ஒருவர் மரணமானார்;

பதற்றம் காரணமாகத் திங்கட்கிழமை இரவை அப்பகுதி மக்கள் தச்சந்தோப்பு விநாயகர் ஆலயத்தில் கழித்தனர்;

மண்டானிலும் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. (ஒ-70-9)

## காமினி விரைவில் ராஜினமா?

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஆகஸ்ட் 16

பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர் காமினி திஸாநாயக்கா தமது பதவியை விரைவில் இராஜினமா செய்வார் என கொழும்பில் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன;

இதேவேளை ஜனாதிபதி ஆர்: பிரேமதஸா அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவர இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கும் அமைச்சர் காமினிக்கும் இடையில் இந்திய அமைதிப்படை விடயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

அதனை அடுத்து ஜனாதிபதி அமைச்சர் காமினியைப் பார்த்து-

"எவரும் அரசாங்கத்தில் இருந்து இராஜினமாச் செய்வதை நான் தடுக்கப் போவதில்லை; கதவுகள் திறந்திருக்கின்றன" என்று கூறியதாகத் தெரிகிறது.

அமைச்சர் காமினி திஸாநாயக்காவுக்கு பிரதமர் பதவியைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா முன்னர் முன்வந்தார் என்றும்—

ஆனால் காமினி திஸாநாயகா அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டார் என்றும்—

அதையடுத்தே இருவருக்கும் இடையில் தகராறு வளர

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் எண்ட கதை தான் போலே பின்னே.....

## தென்பகுதிச் சம்பவங்கள்

கொழும்பு, ஆக 16

திங்கள் பிற்பகல் 4 மணி முதல் நேற்று பிற்பகல் 4 மணிவரை தெற்கில் இடம்பெற்ற சில சம்பவங்களின் தொகுப்பு வருமாறு:

### கொழும்பு மாவட்டம்

★ அதுறுகிரியாவில் பொலீஸ் வாகனம் ஒன்று நிலக்கண்ணியில் சிக்கியது அதில் கான்ஸ்டபிள் கனுஷ்கா என்பவர் மரணமானார். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் காயமுற்றனர்.

### கம்பஹா மாவட்டம்

★ பொலன்வல்ல என்ற இடத்தில் சமாதான நீதவான் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் உள்ளூர் ஐ: தே: க; தலைவர் ஆவார்.

### களுத்துறையில்

★ தீவிரவாதிகள் மத்துகம எனும் இடத்தில் உதவி அரச அதிபர் அலுவலகக் கட்டடத்திற்கு தீவைத்தனர்

### கேகாலையில்

★ அங்குருவலவில் தீவிரவாதிகள் மறைந்திருந்து இராணுவ வாகனம் ஒன்றின் மீது சுட்டனர்; அப்போது இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்; வேறு மூன்று வீரர்கள் காயமடைந்தனர்.

★ பொல்காவலையில் 610 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். தீவி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை விவகாரம்: 2 குழுக்கள் அமைக்க முடிவு!

கொழும்பு, ஆக 16

அமைதிப்படை விலகல்விடயம் தொடர்பாக இரு குழுக்களை அமைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது:

இந்தக் குழுக்களை அமைப்பதற்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவின் அங்கீகாரம் இவ்வார இறுதியில் கிடைக்கும் என்று இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன:

அமைக்கப்படவிருக்கும் முதலாவதுகுழு அமைதிப்படை விலகல் தொடர்பான கால அட்டவணையைத்தயாரிக்கும்: இந்தக் குழுவில் இந்தியப் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்,

அமைதிப்படை விலகும் போது அப்பகுதிகளில் செய்யப்படவேண்டிய மாற்றுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இரண்டாவது குழு திட்டங்களைத் தயாரிக்கும்:

இரண்டாவது குழுவில் இந்தியப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கமாட்டார்கள்:

அமைதிப்படை விலகல் தொடர்பான கால அட்டவணையைத் தயாரிக்கும் முதலாவதுகுழுவில் மாகாண அரசு, இந்தியப்படை, இலங்கை இராணுவம், இலங்கைப் பொலீஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்:

வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு பகுதியிலும் வன்செயல்கள் முடிவடைய அந்தப்பகுதிகளில் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்படும்; அதன்பின்னரே அமைதிப் படையினர் விலக்கிக்கொள்ளப்படுவார்கள் என இந்த வட்டாரங்கள் தெரிவித்தன;

(6 ஆம் பக்கம் பார்க்க )

## திருமலையில் 4 ஜவான்கள் மரணம்

கொழும்பு, ஆக 16

திருகோணமலையில் நடந்த மோதல் ஒன்றில் அமைதிப் படையைச் சேர்ந்த நான்கு ஜவான்கள் கொல்லப்பட்டனர், மூன்று ஜவான்கள் காயமடைந்தனர்; (உ-எ)

## சுன்னுகம் மக்கள் வங்கியில் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக: 16

சுன்னுகம் மக்கள் வங்கிக் கிளையில் இன்று புதன்கிழமை மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது;

இணுவில் கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த 783 குடும்பங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படும்; (ஒ)

## முல்லைத்தீவுப் பட்டினத்தில் இரு இளைஞர் சிரச்சேதம்!

முல்லைத்தீவு, ஆக 16

முல்லைத்தீவுப் பட்டினத்தில் திங்கட்கிழமை நண்பகல் நடந்த இரு கொலைகள் அங்கு பெரும் பதற்றத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தின.

இச்சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர்: கூரிய ஆயுதங்களினால் அவர்களின் தலைகள் வெட்டப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

திங்கட்கிழமை நண்பகல் சுமார் ஒருமணியளவில், நகருக்கு வந்த ஆயுதக்குழு ஒன்று அங்கு நின்ற மூன்று இளைஞர்களைப் பிடித்துக்கொண்டது: சிறிதுநேரத்தில் அவர்களில் இருவர் சிரச்சேதத்துக்கு ஆளாயினர்: தப்பியோட முயன்ற மூன்றுமவரையும் ஆயுதக்குழுவினர் பிடித்துக் கொண்டு கூட்டிச்சென்றனர்: கொய்யப்பட்ட இரு தலைகளையும் அவர்களே எடுத்துச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது;

இந்தச் செய்திகேட்டுப் பட்டினம் பதற்றம் அடைந்தது. சற்று நேரத்தில் பட்டினத்தின் நாலாபக்கங்களிலும் சரமாரியாகத் துப்பாக்கி வேட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வியாபாரிமூலைப் பகுதியில் ஆசிரியர் சூட்டுக்குப் பலி!

பருத்தித்துறை வியாபாரி மூலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடன ஆசிரியர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்:

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

திக்கம் இன்பருட்டி ஊடாக பருத்தித்துறை நோக்கி படையினர் சென்றுகொண்டிருந்தனர் என்றும்—

அப்போது இன்பருட்டியைச் சேர்ந்த நடன ஆசிரியரான குழந்தைவேல் ராஜவேல் (23 வயது) என்பவரையும் கூட்டிச்சென்றனர் என்றும் இடைவழியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்றும் தெரியவந்தது.

இச்சம்பவத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட நடனஆசிரியரின் சடலம் வியாபாரிமூலைச் சந்தியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது:

உறவினர்கள் சடலத்தை எடுத்துச் சென்றனர்; (ஒ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு சோடி வான்கோழி (Turkey) விற்பனைக்குண்டு விபரம் 45, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (1589)

G.C.E. [O/L] கணிதம் புதியபாடத் திட்டம் பகுதி 1 இதற்கான 300 வினாக்கள் இரண்டு மாதிரி வினாத்தாள் [விடைகளுடன்] ஆசிரியர் திரு: த. தயாளன் பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது: [11796]

### தேவை

யாழ் நகரில் பிரபல்யமான வீடியோ ஸ்தாபனம் ஒன்றிற்கு வீடியோ படப்பிடிப்பில் நல்ல அனுபவம் வாய்ந்த சமராமென் ஒருவர் தேவை. தொடர்பு கொள்க இல. 27, 3ஆவது ஒழுங்கை: மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (கி-3051)

பாவித்த கூரை ஓடு 1000 வரையில் தேவை ஸ்ரீ நளாயினி ஸ்ரோர்ஸ் மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (11731)

### சேவை

யாழ்: திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அண்மையில் பாதுகாப்பான சூழலில் பெண்களுக்கு உணவுடன் இருப்பிட வசதிகள் உண்டு. 576, C/o Uthayan: (1601)

### மணப் பெண் தேவை

யாழ்ப்பாண இந்து தாரமிழந்த பட்டதாரி ஆசிரியருக்கு 40 — 45 வயதுக்கிடைப் பட்ட ஆசிரியை தேவை. தாரமிழந்தோரும் விவாகரத்தானோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, சொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்: (1399)

கனடாவில் வேலை செய்யும் 32 வயது கத்தோலிக்க மணமகனுக்கு அங்குள்ள மணப்பெண் தேவை: மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்: (1397)

### மணவாளன் தேவை

யாழ்ப்பாண கோவிய இன 24 வயது மணப்பெண்ணுக்கு 30 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை: மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்: (1396)

### மணமகன் தேவை

பள்ளர் குலம் B.A. பட்டதாரி 36 வயது கௌரவ குடும்ப அழகிய பெண். பணம், நகை, வீடு யாவும் கொடுக்கப்படும் தொடர்பு: ராஜா 65, குறுகோல் ரேட், யாழ்ப்பாணம்: (1400)

### தவறிவிட்டது

மிருணாளினி ஏகாம்பரம் அடையாள அட்டை இல. 668401759X தவறிவிட்டது: கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: (11723)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைதத காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெய, கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்குநாடுங்கள் "சக்தி சரவணா" (அரச அங்கீகாரம் பெற்றசோதிடமட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரைமாந்திரீகநிபுணரும்) 210கஸ்தூரியார் வீதி, (யாழ்/இந்துகல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்; வியாழக்கிழமை விடுமுறை. (9348)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Cobb) இன புரொயிலர், குஞ்சுகள் (Dekalb) இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1388)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புரொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 - 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும்: (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை. (1606)

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hybro புரொயிலர் கு. சுகள் 17, 18 ஆந் திகதிகளில் விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ்: பிரம்படிலேன் கொக்குவில்: (1610)

### வாடகைக்கு வீடு தேவை

மின்சார குழாய் நீர் வசதியுள்ள இரண்டறைகளுள்ள வீடு வேம்படிப் பாடசாலை பெருமாள் கோயில், அல்லது சிவன் கோயிலுக்கு சமீபமாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: பொன்னம்பலம் 153, காங்கேசன் துறைவீதி, கொக்குவில்: (1607)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புரொயிலர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும்எம்மை நாடுங்கள்: ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802: பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி: (1372)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1968 - 06 - 15

மறைவு: 1989 - 07 - 03

நுணாவில் மேற்கு மணங்குணாய் வீதியைச் சேர்ந்த கந்தசாமி இராசமணி தம்பதிகளின் செல்வமகன்

**பாஸ்கரன் (பாசன், அன்ரன்)**

அவர்கள்

நீ மக்களை நேசித்தாய்
நீ மரணத்தை மறந்தாய்
அவை இரண்டும் தெரிந்தன இன்று
இன்று மட்டும் புரிந்தனர் உன்னை யாரென்று?
நீ உற்றம் சுற்றத்தை நேசித்தாய்
அவர்களோ உன்னை வெறுத்தனர்
இன்று நீ இருந்திருந்தால்
எல்லோரும் உன்னை நாடிடுவர்

இவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
ராசச் சித்தப்பா குடும்பத்தினர்,
அம்மா, அப்பா, அம்மம்மா,
தம்பிமார், தங்கைமார்:

மணங்குணாய் பிள்ளையார்கோயிலடி,
நுணாவில்: (1611)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வி. ம. கண்ணையா**

(யாழ்: மாகோ ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்: 12 — 12 — 1907

மறைவு: 23 — 08 — 1983

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு எம்மைப் பிரிந்து வருடங்கள் ஆறு ஆகினாலும் உங்கள் நினைவு எம் மனதை விட்டகலாது:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[1500]

## தீபாவளி ஸ்பெஷல்

**121 தென் இந்திய யாத்திரை சுற்றுலா**

ஆரம்பம்: 14 - 09 - 1989 முடிவு: 4 - 10 - 1989

யாத்திரைக் கட்டணம் ரூபா 4490/-

(இக்கட்டணம் இந்தியாவில் பிரயாணம் செய்வதற்கும் இரவுகளில் அறைகளில் தங்குவதற்கு மட்டுமே! இதர செலவுகள் தனி)

விபரங்களுக்கு:

**விநாயகா ரூர்ஸ்**

சங்கர் ஸ்போர்ட்ஸ்
[அதிபர் அ. வி. அருணாசலம்]
நாகபணி தியேட்டர் காம்பிளக்ஸ்:
சுன்னாகம்.

**17 ஆவது வட இந்திய காசி யாத்திரை காஷ்மீர் சுற்றுலா**

ஆரம்பம்: 25 - 09 - 1989: முடிவு: 20 - 10 - 1989

கட்டணம் ரூபா 8950/- (1609)

## 33ஆம் நாள் நினைவு வழிபாடு



மலர்வு: 07 - 06 - 1969

உதிர்வு: 15 - 07 - 1989

அமரர்

**செல்வன் இரகுநாதன் சிவபரன்**

"எங்கள் உள்ளத்தில் என்றுமிருப்பவன்"

சித்திரத்தினில் வல்லவன் நெஞ்சிடைச்
செந்தமிழ் இனமேன்மை நிறுத்தியே
நித்தமும் பாடுபட்டவன் நல்லவர்
நினைவினில் அகலாத சிவபரன்
சத்தியாகிய ராஜ ராஜேஸ்வரி
தாளினை மறவாத உணர்வினன்
உத்தமன் எங்கள் உள்ளத் திருப்பவன்
ஒப்பிலா இறை பாதத்தை எய்துக!
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்:

பெற்றோர், சகோதர, சகோதரியர்,
மைத்துனர்கள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

கா. இரகுநாதன்,
54, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம். [1528]

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

**திரு. விசுவலிங்கம் தில்லைநாதன் (பாலு)**

(பிரபல வர்த்தகர்)

தோற்றம்- 17-10-1954 மறைவு- 07-07-1989

16-08-1989 இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
மனைவி, மகள், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்,
மாமா, மாமி,
முருகையா குடும்பத்தினர்

"பாலு இல்லம்"
இணுவில் தெற்கு,
இணுவில்:
(1531)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மயிலு கனகராஜா**

தோற்றம்: 02 - 05 - 1932

மறைவு: 26 - 08 - 1988

திதி: 16- 08- 1989

தெய்வத்தின் சந்நிதியே நாளும் கதியாய்
வாழ்ந்தநீங்கள் கோவிலதில் உயிர் விட்டீர்!
ஓராண்டு ஓடினும் நினைவுகள் ஓடிடுமாமோ
நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லவராய் வாழ்ந்த
நமதில்லத் தெய்வமே நினைவது
எங்கள் கண்கள்மட்டுமா உன்னங்களும் தானையா!
மறைந்தது பொய்யுடல் மட்டுமே பொழுதெல்லாம்
மறையாது கண்களுக்குத் தெரிவதும் ஏனையா?

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள் சகோதரர்,
மைத்துனர்மார், உறவினர்.

எம். எஸ். ஒழுங்கை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்: (1534)

## 50ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கந்தையா குலேந்திரா S. L. A. S.**

[கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், வலிகிழக்குப் பிரதேசபை விசேட ஆணையாளரும்]

தோற்றம்: 02 - 11 - 1939

மறைவு: 28 - 06 - 1989



மெய்வருத்தம் மாறுமுன் சேவை உணர்வால்
கடமைக்கு வந்ததுவும் பொய்யோ ஐயா!
செய்வதற்கு பணி நிறைய உண்டென் ெம்மை
நெறிப்படுத்தி வந்ததுவும் பொய்யோ ஐயா!
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து எங்கள்
நெஞ்செல்லாம் நிறைந்தவரே உங்கள் உயிரை
கொய்தெடுத்துச் சென்றாலும் உங்கள் சேவை
கோப்பாயில் நிலைத்திருக்கும்! அழியாது என்றும்!

— கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள்.—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

பொருள்:
பிறர்க்கு வரும் பழிக்காகவும் தமக்கு வரும் பழிக்காகவும் நாணுகின்றவர், நாணத்திற்கு உறைவிடமானவர் என்று உலகம் சொல்லும்.

உதயன்

இல 392/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி 24800, 22078

16 - 08 - 1989 த: பெ: இல. 11

# பொருளாதாரப் பொம்மலாட்டம்

அரசாங்கம் அவசர அவசரமாகச் சில விலை உயர்வுகளையும் கட்டண உயர்வுகளையும், மறைமுக வரிகளையும் அறிமுகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாம்! இதில் வேடிக்கை என்னவெனில், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இம்மாதம் 21 ஆம் திகதி இலங்கை வருவதற்கு முன்னர் விலை உயர்வுகள், கட்டண உயர்வுகள் அறிவிக்கப்பட்டுவிடவேண்டும் என்பதாகும். இல்லையேல் இலங்கைக்குக் கடன் கிடைப்பது முயற்கொம்பாகிவிடும்.

இந்த நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், அவை சம்பந்தப்பட்ட நடைமுறைத் திட்டங்களையும் தீர்மானிக்கும் சக்தி உலக வங்கியிடமும், சர்வதேச நாணய நிதியத்திடமுமே பல வருடங்களாக இருந்து வருகிறது. குறிப்பாக 1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இந்நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பையும், நடவடிக்கைகளையும் தீர்மானிப்பதில் முன்கூறிய இரண்டு நிதி நிறுவனங்களும் மிகப் பிரதான பங்கு வகித்து வருகின்றன.

இலங்கை அரசு பொம்மையாகவும் அவை இரண்டும் கூட்டுப்பொம்மை ஆட்டக்காரர்களாகவும் இருக்கின்றன. கடன் என்பதே கயிறு. இந்தப் பொருளாதாரப் பொம்மலாட்டம் இதுவரை உள்ளரங்கிலேயே நடந்து வந்தது. இப்போது வெளியரங்கமாகத் தெரியும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது!

இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கைகள் சுயாதீனமானவை அல்ல. பொருளாதாரமே அடகு வைக்கப்பட்டுவிட்டது. உலக வங்கி விலை உயர்த்தச் சொன்னால் விலை உயர்த்த வேண்டும். சர்வதேச நாணய நிதியம் வரி அறவிடுமாறு சிபாரிசு செய்தால் மறுபேச்சில்லாமல் அதனை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவே இயல்பு நிலையாக ஸ்திரமடைந்திருக்கிறது.

இவை இரண்டினதும் சிபார்சுகளை நடைமுறைப் படுத்தச் சிறிதுகால தாமதம் செய்தால் கூட, கடன் தின்று கஷ்டம் வந்துவிடுமோ என்று அஞ்சும் அளவுக்கு உலக வங்கியிலும், சர்வதேச நாணய நிதியத்திலும் இலங்கைப் பொருளாதாரம் தங்கி இருக்க விதியாக்கப்பட்டு விட்டது.

தாம் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த புதிதில் விலை உயர்வுகள், வரி விதிப்புகளைச் செய்யாமல், அடிமட்ட மக்கள் மீது பளுவைச் சுமத்தாமல், சிறிது காலத்தை ஓட்டி, மக்கள் அபிமானத்தைப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா நினைத்திருக்கலாம். அதனால் இரட்டை நாயகர்கள் தெரிவித்த சில சிபார்சுகளை அமுல் செய்வதைத் தாமதித்து இருக்கலாம்.

ஆனால் ஆறு மாதங்களுக்கு மேல் அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை பார்த்தீர்களா! பொருளாதாரச் சர்வாதிகாரிகளின் நெருக்குதல் இப்போது கழுத்தளவுக்கு வந்து விட்டது. அதனால் மாற்று வழியே இல்லாமல் அவசர அவசரமாக, திடீர் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் சூழ்ந்திருக்கிறது!

மொத்தத்தில் இரட்டை நாயகர்களிடம் இலங்கையை அடகு வைக்காமல், அவர்களின் சொற்படி ஆடாமல் எவரும் ஆட்சி நடத்த முடியாது: இலங்கைக்குப் பொருளாதாரமே இல்லை என்ற நிலை உணர வைக்கப்பட்டுள்ளது

வெளிநாட்டுக் கடன் மட்டுமே இலங்கையின் பொருளியல் வளம் என்று கூறுமளவுக்கு இங்கு உற்பத்தி நிலை வீழ்ச்சியுற்றுள்ளது. தேயிலையால் கிடைக்கும் வருமானம் கூட இந்த ஆண்டின் முதல் ஆறுமாதங்களிலும் மிகமிக அடிமட்டத்துக்கு வந்துவிட்டது. அதே வரிசையில் விவசாயம், கைத்தொழில், சுடற்றொழில், உல்லாசப் பயணத்துறை என்று எல்லாமே மந்தத்திலும் மந்தமாகி விட்டன.

இப்போதைய அரசியல் நெருக்கடி நாட்டுப் பொருளாதாரத்தை படுகுழிக்குள் புதைத்துவிடும் பயங்கர நிலையை அடைந்திருக்கிறது: அரசியல் தீ ஒரு பக்கமும், பொருளாதாரத் தீ ஒரு பக்கமுமாக இரு தலைக்கொள்ளி எறும்பு போல பிரேமதாசா அரசாங்கம் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டிருக்கிறது: இந்த ஆபத்திலிருந்து, ஒரு பக்கத்தாலாவது தப்புவதற்கு, இரட்டை நாயகர்கள் இட்ட கட்டளைக்குப் பணியாமல் இருக்க முடியாத நிலையில் விலை உயர்வுகளும், வரிகளும் பொதுமக்கள் மீதே சுமத்தப்படப் போகின்றன.

தான் நேசிப்பதாகக் கூறும் அடிமட்ட மக்கள் தரப்பு. பொருளாதார எசமான்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரட்டை நாயகர் தரப்பு. இந்த இரண்டில் ஜனாதிபதி பிரேமதாச எங்கே சார்ந்து நிற்கப் போகிறார்? மக்களைக் காப்பாற்ற முனைந்தால் பதவி பறிபோகும் ஆபத்து உண்டு என்பதை மற்றவர்களைப் போல அவரும் உணராமலிருக்க நியாயமில்லை.

## பாத யாத்திரை

சாவகச்சேரி, ஆக. 16

நல்லூர் கந்தசுவாமி கோயில்திருவிழாவையொட்டி சாவகச்சேரி திவ்யஜீவன சங்கம் பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இம் மாதம் 20 ஆம் திகதி சாவகச்சேரி வாரிவன நாதர் சிவன் கோயிலில் இருந்து அதிகாலை இந்த யாத்திரை ஆரம்பமாகும்.

சங்கத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் புறப்படும் இக் குழுவினர் கைதடி சைவச் சிறுவர் இல்லம் சென்று நாவற்குழி, நாயன்மார்கட்டு, முத்திரைச் சந்தை வழியாக ஆலயத்தை அடைவர். (க-31)

## மன்னாரில்

யாழ்ப்பாணம், ஆக. 16

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் நாலாவது ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வண பிதா அ. சேவியர் குருஸ் தலைமையில் மன்னார் அல் அஸ்ஸார் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறும். (த)

# மாணவர் நோய்க் குறைபாடுகளை ஆசிரியர் கண்டு பிடிக்க பயிற்சி

## யாழ். மருத்துவ பீடம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக 16

பாடசாலை மாணவர்களின் நோய்க்குறைபாடுகளை ஆசிரியர்களே கண்டுபிடிக்கத்தக்க வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஏற்பாடு செய்துள்ளது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சிறு பிராயத்திலிருந்துவரும் கண், பல், காது சம்பந்தப்பட்ட நோய்களை ஆசிரியர்களே கண்டுபிடிக்கப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி முதலில் கோண்டாவில், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குஐந்து நாள் பயிற்சி வைத்தியபீடத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

சிறுபிராயத்தில் ஒரு மாணவன் ஒருநோயால் பீடிக்கப்பட்டிருந்தாலும் அம்மாணவன் வளர்ந்தபின்பே சுகாதார அதிகாரிகள் நோயைக் கண்டுபிடிக்கிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம்சிறுபிராயத்திலேயே மாணவர்கள் நோயைக் கண்டுபிடிக்கலாம் என்று மருத்துவ பீடத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-3)

## ஓய்வூதியக்காரர்களுக்கு

# ரூ. 260 அலவன்ஸ் வழங்க முடிவு எடுக்கப்படவில்லை!

கொழும்பு ஆக. 16

ஓய்வூதியக்காரர்களுக்கு 260 ரூபா அலவன்ஸ் வழங்குவதாக அமைச்சரவை முடிவு எடுக்கவில்லை;

பொது நிர்வாகத்துறை அமைச்சர் யு. பி. விஜேக்கூன் முன்கண்டவாறு கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அலவன்ஸ் வழங்கும் அமைச்சரவையின் முடிவு ஏன் அமுல் நடத்தப்படவில்லை என், எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒத்திவைப்புப் பிரேரணை மீது கேள்விகள் எழுப்பினர்.

அப்போதே அமைச்சர் அப்படி அமைச்சரவை முடிவு ஏதும் செய்யப்படவில்லை என்றுசொன்னார். (உ - எ)

# கேரதீவு - சங்குப்பிட்டி புதிய பாதை சேவையில்

கேரதீவு — சங்குப்பிட்டி புதிய பாதைச்சேவை ஒன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாநில வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் திரு. எஸ். பாலேந்திரா இதனை ஆரம்பித்து வைத்தார்.

யாழ் பிரதான பொறியியலாளர் திரு. என். செல்வரத்தினம் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. ஏ. ஜெயவீரசிங்கம், புரமோட்டர்ஸ் என்ஜினியரிங் பிராந்திய முகாமையாளர் திரு. க. பூரணச்சந்திரன் உட்படப் பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

பூநகரி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. தி. இராசநாயகம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

ஏற்கனவே சிறிய பாதை இருந்த இடத்தில் தற்போது பத்துத் தொன் பாரமுள்ள பெரிய பாதை சேவைக்கு விடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி மார்க்கமாக பூநகரி செல்லும் 56 மைல் தூரத்தை கடல் மார்க்கப் பிரயாணம் மூலம் 23 மைல் ஆகக் குறைக்க முடிகிறது.

## சிபார்சுகளை அமுல் நடத்தாவிடில்

# பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடிய ஆபத்து

கொழும்பு, ஆக. 16

வருகிற 21 ஆம் திகதி இலங்கை வரும் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் தூதுக்குழுக்கள் தெரிவிக்கும் சிபார்சுகளை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தாது விட்டால் பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்நோக்க வேண்டி வரும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

இக்குழுவினர் கொழும்பு வருவதற்கு முன்பாக திறைசேரிச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் அவசரமாக வாஷிங்டன் சென்றுள்ளார்.

அங்கு அவர் தூதுக்குழுவினருடன் பேச்சுக்கள் நடாத்தி வருகிறார் என்று அறியவந்துள்ளது.

ஒப்புக்கொண்டபடி உலக நிதி நிறுவனங்களின் சிபார்சுகளை இலங்கை அரசு முன்னர் அமுல் நடத்தத்தவறியதன் காரணமாக சர்வதேச நிதியம் தான் வழங்கவேண்டிய 8 கோடி 70 இலட்சம் டாலர் நிதி உதவியை நிறுத்தியது தெரிந்ததே.

வருகிற 21 ஆம் திகதி வரும் குழுவின் வழிகாட்டலின் அடிப்படையில் இலங்கை அரசின் புதியபொருளாதாரக் கொள்கை அமையாவிடின் உலக நிதி நிறுவனங்கள் உதவ முன்வரா என்று பொருளாதார வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. (இ எ)

## மயிலியதனையில் வேட்டுச்சத்தம்

வல்வெட்டித்துறை ஆக 16

தொண்டமானாறு, மயிலியதனைப் பகுதியில்திங்கள் காலை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் அயல் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். (ஓ-160)

# அடம்பனில் 800 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்

## யூ. என். எச். சி, ஆரும் உதவிகளை வழங்கியது

மன்னார், ஆக. 16

அடம்பனில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட எண்ணூறு குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடம்பன் படையினர் முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல்கள் குடிமனைப் பகுதியில் விழுந்து வெடித்ததினால் சுமார் 800 குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின.

இந்த வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே ஒரு வாரத்துக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. குறாஸ் தெரிவித்தார்.

மேற்படி 800 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயமும் உதவியை வழங்கியது.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் சுமார் 300 ரூபா பெறுமதியான புடவைப் பார்சல்களை, யூ. என். எச். சி. ஆர். உயரதிகாரி முன்னிலையில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெபநாயகம் வழங்கினார். (த-ரி)

# ஐக்கிய உபவாச ஜெபம்

தேசத்தின் சமாதானத்தையும் அமைதியையும், நீதியையும் வேண்டி ஐக்கிய உபவாச ஜெபநாள் இன்று யாழ்-பரியோவான் கல்லூரி மண்டபத்தில் காலை ஒன்பது மணி முதல் ஒருமணி வரை நடைபெற இருக்கிறது.

யாழ்-ஜெபக் குழுக்களின் இணைப்பாளர் சூரிவில்லியம்ஸ் சகல கிறீஸ்தவர்களையும் இப்பிரார்த்தனையில் கலந்து ஜெபிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-3)

## சமய சந்நிதிகளில்

### வரலக்ஷ்மி உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக 16

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வரலக்ஷ்மி உற்சவமும் விரத வழிபாடும் 18 ஆம் திகதி வெள்ளிக் காலை 8மணிக்கு நடைபெறும்

### மகா கும்பாபிஷேகம்

மண்டைதீவு, ஆக 16

மண்டைதீவு திருப்புலம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும்21ஆம்திகதி திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான ஆரம்ப கிரியைகள் 17ஆம்திகதி ஆரம்பமாகும். (த-88)

### துர்க்கை அம்மன் திருவிழா

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் செப்ரம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த் திருவிழா 11 ஆம் திகதியும் தீர்த்த உற்சவம் 12 ஆம் திகதியும் இடம் பெறும். (க-31)

### இன்று தீர்த்தம்

பசுபிலைப்பள்ளி, ஆக. 16

அனலைதீவு - அருள்மிகு ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று புதன் கிழமையும் நாளை பூங்காவனமும் நடைபெறும். (த-117)

## இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், ஆக. 16

வர்த்தக விடுமுறைகளுக்கு அமைய இன்று புதன்கிழமை பௌர்ணமி விடுமுறையை சகல வர்த்தக நிறுவனங்களும் மற்றும் ஏனைய தொழில் நிறுவனங்களும் பொது விடுமுறையாக ஏற்றுச் செயல்படுத்துமாறு யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. (உ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

# அருள் தாராயோ முருகா?

ராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

— பல்லவி —

வாராயோ முருகா — அருள்
தாராயோ நல்லையூர் முருகா ஐயா — (வாரா)

— அனுபல்லவி —

மூவகைத் தமிழாலே நாவார உனைப்பாடிப்
பாமாலை பலசூட்டி நாள்தோறும் துடிக்கிறேன்
(வாரா...)

— சரணம் —

பாவலர் உனைப்பாடும் பாடல்கள் செவிமடுத்தேன்!
பாவலர் போலுன்னைப் பாடிட ஆசை கொண்டேன்!
பாடிடும் ஞானமில்லேன் பாடுகின்றேன் அம்மா!
பாடிடும் ஞானம் தாராய் பாரினிலுன்னைப் பாட!
(வாரா...)

நல்லையூர்: யசோதரன்

இன்று நல்லைக் கந்தனின் 11 ஆம் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை முற்றோதல் பூர்த்திவிழா

காங்கேசன்துறை: ஆக: 16

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் தொடர்ந்து மூன்று மாத காலமாக நடைபெற்று வந்த திருமுறை முற்றோதலின் பூர்த்தி விழா சுந்தரர் குருபூசை தினத்தன்று இடம் பெற்றது.

தேவஸ்தான நிர்வாகத் தலைவி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து திருமுறைமுற்றோதலில் கலந்துகொண்ட முப்பது ஓதுவார்களும் கௌரவிக்கப்பட்டனர். (த-31)

## வாசகர் திருமுகம்

### டச்சு வீதி திருத்தப்படுமா?

கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள இவ்வீதிபல காலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாய் இருக்கிறது. ஆனால் இவ்வீதியைப் புனரமைப்பதற்கு கல்லுகள் பறித்து சுமார் 8 மாதங்கள் ஆகின்றன.

ஆகவே இதைச் செப்பனிட மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

நாகமணி மகேந்திரலிங்கம், கட்டப்பிராய்.

### எரிபொருளில் லாபம்

'சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைக் கடைகளில் மண்ணெண்ணெய் லீற்றர் ரூபா 9. 60 சதமாக விற்பனை செய்கின்றது. இதே நேரம் சாவகச்சேரி தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் லீற்றர் ரூபா 7. 06 சதத்திற்கு விற்பனை செய்கின்றது.

மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய சங்கம் மக்களிடம் லீற்றருக்கு ரூபா 2. 54 சதம் அதிக லாபம் பெறுவதை ஓட்டி யாழ். உதவி கூட்டுறவு ஆணையாளரும், எரிபொருள் கூட்டுஸ்தாபனமும் நடவடிக்கை எடுக்கமுடியாதா?

ப. தனபாலசிங்கம், சாவகச்சேரி.

### மீளக்குடியமர்வு நிவாரணம்

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் வேறுபாடான மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது.

விசுவமடு, மன்னகண்டல், ஒட்டுசுட்டான் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் மீளக்குடியமர்வு நிவாரணமாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. மாங்குளம் கிராமசேவகர் பிரிவில் 4 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

மாங்குளம் பகுதி மக்களுக்கு உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடை மட்டும் வழங்கப்படுவதோடு மீளக்குடியமர்வுப்படி வழங்கப்படவில்லை.

ஆகவே அதிகாரிகள் 4 ஆயிரம்ரூபா வழங்கியவர்களுக்கு மேலும் 2 ஆயிரம் ரூபா வழங்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

எம். கே. யோகரத்ணம், மாங்குளம்.

### பொருட்கள் மீட்பு

மானிப்பாய் சோதி வேம்படி காளி அம்மன் தேவஸ்தானத்தில் திருடப்பட்ட பொருள்கள் ஆலய தர்மகர்த்தா சபையின் முயற்சியினால் மீட்கப்பட்டன.

கடந்த 4 ஆம் திகதி இந்தத் திருட்டு சம்பவம் இடம் பெற்றது. (த)

# கண்டதும் கேட்டதும்

குடாநாட்டில் தற்போது சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு நேரம் ஒதுக்கப்பட்டு மின்சாரம் கிடைக்கிறது.

தமக்கு மின்சாரம் கிடைக்கும் நேரத்தை நிலைவு படுத்திக் கொள்வதற்காக பலரும் பல்வேறு உத்திகளைக் கையாள்கிறார்கள். மின்சாரம் வந்தவுடன் லைட் எரியத்தக்கதாக சிலர் வீடுகளில் உள்ள அத்தனை சுவிற்சுகளையும் போட்டுவிடுகிறார்கள், மணிக் கூட்டில் அலாரம் வைப்பவர்களும் இல்லாமல் இல்லை.

மின்சாரம் வந்தவுடன் தண்ணீர் மோட்டர்களைப் போடுபவர்களும் உடுப்புகளை அயன்பண்ணுபவர்களுமே அதிகம்.

அதே சமயம் நேரம் காத்திருந்து அவசரம் அவசரமாக டெக போடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இப்படிப் பலருக்கும் பல அக்கறைகள்!

— செய்திலோலன்

## ஐந்தாவது டெஸ்ட்

# ஆஸி அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி

நொட்டிங்ஹாம் ஆக 16 இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்தாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா அணி இன்னிங்ஸ் வித்தியாலயத்தில் வெற்றி பெற்றது.

நடந்து முடிந்த 5 டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி 4 என்ற ரீதியில் வெற்றி பெற்றுள்ளது.

நொட்டிங்ஹாம் ரென்ட்பிரிட்ஜ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் ஆஸி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆஸி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 602 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 255 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 347 ஓட்டங்களைப்பெற வேண்டிய நிலையில் மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. (த - 6)

## ஆசிய குத்துச் சண்டைப்போட்டியில்

# பங்குபற்றச் சென்றவர் பார்வையாளர் ஆனார்

### எடை கூடியதன் விளைவு

அண்மையில் சீனாவின் பீகிங்கில் (தற்போது பெய்ஜிங்) நடைபெற்ற ஆசியக் குத்துச்சண்டை சம்பியன் போட்டியில் இலங்கையின் சார்பாகக் கலந்து கொள்ளச் சென்ற வீரர் ஒருவர் பார்வையாளர்களில் ஒருவராக இருந்து விட்டு நாடு திரும்பினார்.

ஆர். கே. சுமித்பிரசன்ன எனும் இந்த வீரர் 54 கிலோ கிரும் எடைப்பிரிவில் பங்குபற்றுவதற்காக பீகிங் சென்றிருந்தார்.

அங்கு இவரது நிறை 2 கிலோகிரும் அதிகரித்துக் காணப்பட்டதால் போட்டியில் கலந்து கொள்ள முடியாது போய்விட்டது.

இப் போட்டியில் கலந்து கொண்ட மற்றைய இரு வீரர்களான ஏ. குலதுங்க, ஜகத்பிரசன்ன ஆகியோர் முறையே முதலாவது, இரண்டாவது சுற்றுக்களில் தோற்றுப் போனார்கள். (த - 6)

## இந்து இளைஞர் திருமுறைக் கழகம்

மண்டைதீவு. ஆக. 16

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக்கழகத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு மண்டைதீவுசிறுப்புலம்மைதானத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் திரு. க. மாணிக்கலிங்கம் தலைமையில் நடைபெறும், விழாவில் பட்டி மன்றம் கவியரங்கு, இசையரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விஷேச நிகழ்ச்சியாக சங்கீத ரத்தினம் திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரனின் சங்கீதக்கச்சேரி நடைபெறும்) (க - 88.

## தொலைபேசி இயங்குகிறது

சுமார் ஒன்றரை வருடகாலமாக இயங்காத நிலையில் இருந்து வந்த நிந்தாவூர் அரசினர் வைத்தியசாலையின் தொலைபேசி தற்பொழுது இயங்கத் தொடங்கியுள்ளது. (க-14)

# கிளிநொச்சிக் கிளையிலும் பொன்விழாக் கொண்டாட்டம்

வட்டக்கச்சி, ஆக. 16


இதுவரை வழங்கியது போலவே தொடர்ந்தும் வாடிக்கையாளர்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

கிளிநொச்சி இலங்கைவங்கிக் கிளையில் நடைபெற்ற பொன்விழாக்கொண்டாட்டத்துக்கு தலைமைவகித்து உரையாற்றிய திரு. என். சிறிசோமசுந்தரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் - இந்த மாவட்டத்தில் வசிப்போர் மட்டுமல்லாது பிறமாவட்ட மக்களும் எமது வங்கியில் வாடிக்கையாளர்களாக உள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில் கிளிநொச்சி கிளையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (த)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. கந்தசாமி கிருஷ்ணகுமார்

(இராஜன்)

(ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவன்)

தோற்றம்: 31 — 05 — 1968

மறைவு: 17 — 07 — 1989

அன்புக் 'கிருஷ்ணகுமார்' இனிய மகனே!
ஈழத் தகவல் நிலையத்தில் இருந்து.
ஈடில்லாப் பணிகள் புரிந்த வீரனே,
இன்னுமொரு நாட்டில் இன்னுயிர் போனதோ!

எமது அன்பு மகனின் பிரிவுச் செய்தி கேட்டு நாம் ஆருத்துயரில் இருக்கும் போது எமக்கு நேரிலும் கடித மூலமும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இன்று 16-08-1989 புதன்கிழமை அதிகாலை எமது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நண்பகல் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம் உமது பிரிவால் வாடும்:
அன்பின் அம்மா, சகோதரர்கள்.

'இதய பவனம்'
டச்சு ரோட்,
உடுவில்.

[1605]

## வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பல ரகமான 5150 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.

ரூபா 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திரம்'' எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்: சாக்குகளை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 23 - 08 - 1989

- பொதுமுகாமையாளர்
புலோலி பல நோ. கூ. சங்கம்.

[சி-3213]

## மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

# கேள்வி அறிவித்தல் - 1989

வெள்ளிவிழாவின் போது அத்திவாரமிடப்பட்ட மாடிக் கட்டிடத்திற்கு அத்திவார மட்டத்திலிருந்து சீமெந்துக் கூரை மட்டம் வரை கட்டுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்பத்திரங்களையும், வேலை விபரங்களையும் கல்லூரிக் காரியாலயத்தில் ஆகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை கல்லூரி வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி வாய்ந்த கட்டிட ஒப்பந்தக்காரர் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

S. K. Sundaresan,
கல்லூரி அதிபர்.

[1499]


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு

நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோர் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற

1 வார **துரித பயிற்சி வகுப்புகள்**

பாடநெறி: பொது அறிவு - பொதுஉளச்சார்பு

ஆரம்பம் 19 8 - 89

★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் (மு.ப 9-12வரை)
★ இலவச பாடக்குறிப்புகள். வினா-விடைப்பயிற்சிகள்.
★ கட்டணம் ரூபா 150. 00 (முழுப்பயிற்சிக்கும்)

**ASTAN INSTITUTE**

101/10, Stanley Road, Jaffna.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

(C/3297)


# யாழ் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞானமாணி பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஆக 16

யாழ் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞானமாணி பரீட்சை முடிவுகள் கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

இம்முடிவுகள் பல்கலைக்கழக செனட்டினால் உறுதி செய்யப்படவேண்டியவை.

பொது விஞ்ஞான மாணிப் பரீட்சை (1988) சித்தி அடைந்தோர் விவரம் வருமாறு.

முதல் தரத்தில் எந்தவொரு மாணவருமே சித்தியடையவில்லை

### இரண்டாம் தரம் (மேற்பிரிவு)

ரி. ஜெயக்குமாரன் செல்வி எஸ். வித்தியா பூரணி பீ. கிரிதரன்.

### இரண்டாம் தரம் (கீழ்ப்பிரிவு)

செல்வி ஏ. அகம்பதாகாந்திமதி ஜி. ஏ. ஆர் சந்திரகுமார் செல்வி ரி. கீதா செல்வி வை. கலாநிதி செல்வி எஸ். கலையரசி செல்வி எஸ். சுமதிசெல்வி எஸ். சுகந்தி எஸ். தயாபரன் செல்வி ரி. தனுஜா செல்வி ரி. உமாராணி செல்வி கே. ஜானகி எஸ். அருணன் கே. குலராஜன் ஜி. மகேந்திராஜ் கே. மோகனதாஸ் செல்வி எஸ். ஸ்ரீகாந்தா கே. வேலாயுதநாதன் செல்வி கே. கிருஸ்ணலதா செல்வி யு. ஆரூரன்.

### சாதாரண சித்தி அடைந்தோர்

செல்வி ஆர். ஒளவை செல்வி கே. அன்பரசி செல்வி வி. இந்துமதி செல்வி ஜி. ஜோனேபாரக் செல்வி எஸ். காசிமாமலர் செல்வி. ஜி. குமுதினி செல்வி எஸ். கோசலா செல்வி கே. கங்கேஸ்வரி ஆர். கே. லோகநாதன் செல்வி கே பாக்கியலட்சுமி செல்வி எஸ். பூமா எம். புஸ்பவண்ணன் செல்வி கே. எம். பிரான்ஸிஸ் ஸாவியர் செல்வி கே. றஜனு செல்வி பி. ரதிதேவி செல்வி ரி. ரூபவதி செல்வி எம். சித்திரா செல்வி என். சத்தியரூபி செல்வி ஆர். தயானி செல்வி கே. தேவகி செல்வி கே. வானதி செல்வி எஸ். செல்வரதி செல்வி ரி. சாந்தினி செல்வி எஸ். அனுஷா ரி. திலீபன் பி. இராதாகிருஷ்ணன் எஸ். வரதராஜா செல்வி ஆர். கமலினி செல்வி எம். கலைவாணி எம். முருகதாஸ் பி. மனோகரன் செல்வி வி. சாரதாம்பாள் செல்வி எஸ். சாந்தினி எம். ஈஸ்வரமூர்த்தி திருமதி பி. பாலரட்ணராஜா கே. ஸ்ரீரங்கன் ஏ. விஜயகோன் என். நாககுமாரன் செல்வி கே. நந்தகுமாரி வி. ரவீந்திரா செல்வி விஜயலீஸ்வரி

எஸ். சக்திபாகன் எஸ். சிவகணநாதன் செல்வி கே. சுலோசனாதேவி செல்வி பி. தவமலர் செல்வி ரி. யசோரதி செல்வி ஜி. தயாநந்தினி ரி. யுவேந்திரகுமார் செல்வி எஸ் குணசுந்தரி ரி. ஜெயசங்கர் ரி. அருள்ராஜா ஜி. அன்ரன் பெட்ரம் செல்வி வி. சித்ரா எம். கோபாலகிருஷ்ணன் செல்வி ஏ. மாலினி கே. நாகேந்திரம் எஸ். ஏ. நற்குனேஸ்வரன் வி. இராஜேஸ்வரா ஆர். இராமச்சந்திரன் ஜே. சந்திரபிரகாஷம் எஸ். தேவராஜா வி. யோகதாசன் எஸ். தயாசிலன் கே. யோகராஜா ரி. மித்திரன் என். நல்லநாதன் எம். எம். நிசார்டின் ஏ. ரி. ராஜ்குமார் செல்வி என். ரமணிசியாமா எல். எல். ரவீந்திரா கே. சாந்தகுமார்.

ஜி. ஸ்ரீதரன் செல்வி எஸ். உதயகுமார் ஆர். வசந்தன் ஏ. ஆர். சி. கொன்ஸ்ரன்ரைன் செல்வி கே. அருணா செல்வி எஸ். மதிவதனி வி. கே. பாஸ்கரன் எஸ். ஜே. மரியதாஸ் ஆர். எஸ். பாஸ்கரன் ரி. ரவீந்திரன் எஸ். பி. வைத்தியநாதன் சி. விஷ்ணுகுமார் எம். ஏ. ரூபநாதன் வி. கைலைநாதன் என். தெய்வேந்திரன் எஸ். கே. திருமுருகன் செல்வி சி. ரேரஜினி டி. சிவசோதி.

கனகசபாபதி நினைவுப் பரிசை ஜெயக்குமாரனுக்கு வழங்கப்படுகிறது. (இரி-6)


# டக் உறுதிமிக்கது, நீடித்துழைக்கும் திறமை வாய்ந்தது

டக் - வலிமைமிக்க நம்பத்தகுந்த பாரம் ஏற்றி. நீண்டதூரம் பொருட்களை ஏற்றிச் செல்ல மிகவும் விரும்பப்படுவது டக். நடைமுறை அறிவடிப்படையான பொறியமைப்பில் கடுகடுப்பாக அமைக்கப்பட்டது.

டக் ஒருபோதும் உங்களை ஏமாற்றம் அடையச் செய்யாது. எல்லாவற்றிலும் மேலாக டக் மிகவும் குறைந்த எரிபொருளில் இயங்கக் கூடியது அருமையான சொத்து. புதிய சிறப்புமிக்க டக்கில் அமைந்துள்ள ஒப்பிட்டுக் கணக்கிட முடியாத தொழில்நுட்ப இலட்சணங்கள்:-

★ வலுமிக்க ஸ்ரியறிங்.
★ இரு சுற்றுத் தடுப்பு (பிறேக்) முறை.
★ குறைந்த 'கியரில்' இயங்கக்கூடிய 'டிபரென்சியல்'.
★ ஒரு நேர்விசைவலைக் கண் (சிங்குரோமெஷ்) கொண்ட கியர் பெட்டி
★ மேலதிக பாரத்தைப் பொறுக்கக் கூடிய, வலுப்பெறச் செய்யப்பட்ட 'செசிஸ்கும்', திருத்தி அமைக்கப்பட்ட 'சஸ்பென்சனும்'
★ துருப்பிடியாத தொப்பி மூடி. ★ 'எயர் ஹோண்'.
★ வானொலிப்பெட்டி. ★ 5 மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேலான உதிரிப்பாகங்கள்.
★ 12 மாதங்களுக்கு/30,000 கி.மீ. ஓடும் வரை உத்தரவாதம்.
★ 3 இலவச செவ்விந்தல்கள்

விற்பனை நிலையங்கள்:
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.




இலங்கையில் பிரதான ஏஜென்ஸ் -
பிறீ லங்கா ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
409, காலி வீதி, கொழும்பு - 3.
தொலைபேசி: 575241 - 4. ரெலெக்ஸ்: 21147 பக்ஸ்: 575441

உதிரிப்பாகப் பகுதி:
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை.
தொலைபேசி: 530595, 530879.

உறுதிமிக்க நம்பத்தகு பாரம் ஏற்றி 'டக்' லொறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுனெஸ்கோ திட்டங்கள்

பாரிஸ், ஆக. 15

உலகில் 22 கலாசார வளர்ச்சித் திட்டங்களுக்கு யுனெஸ்கோ நிதி உதவி வழங்கவுள்ளது.

உதவி கோரி 234 திட்டங்கள் யுனெஸ்கோவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் இருந்தே இந்த 22 திட்டங்களும் தெரிவு செய்யப்பட்டன. (ஏ)

# நாட்டுக்காக உயிரை அர்ப்பணிக்கத் தயார்;

# 43 ஆவது சுதந்திரதின உரையில் ராஜீவ் சபதம்!

புதுடில்லி, ஆக. 15

இந்தியாவின் 43 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இன்று புதுடில்லி, செங்கோட்டையில் விமரிசையாக நடந்தன.

பிரதமர் ராஜீவ் காந்தி அப்போது நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது;

வகுப்புவாத, பிரிவினைவாத சக்திகள் நாட்டைப்பலவீனப்படுத்த அனுமதிக்க முடியாது. இதற்காக எவ்வளவு தியாகத்தையும் செய்ய மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

காலத்திற்கு காலம் இச் சக்திகள் நாட்டைப் பலவீனப்படுத்த தலைதூக்கி வருகின்றன.

பெற்ற சுதந்திரத்தை பேணிக்காக்க வேண்டியது எங்கள் பணியாக அமைய வேண்டும்;

இந்திரா காந்தி அரசை கவிழ்க்க முனைந்த அதே சக்திகள் இன்றும்அரசைக் கவிழ்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன;

பஞ்சாப், திரிபுரா, அஸாம் டார்ஜிலிங் ஆகிய இடங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இப் பிராந்தியத்தின் சமாதானத்தின் மீது இலங்கை நிலையின் நிழல்படர்ந்து உள்ளது. இவற்றில் பல பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விட்டது.

வெளிநாட்டுச் சக்திகள் நாட்டைப் பலவீனப்படுத்துவதற்கு உள்நாட்டுச் சக்திகளுக்கு துணைபுரிகின்றன. இதை அனுமதிக்க முடியாது. நாடு சிதறுண்டு போவதைத் தடுக்க வேண்டும்;

நாட்டுக்காக உயிரை அர்ப்பணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கும் நான் தயாராக இருக்கின்றேன் —

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (ஏ)

# மனித உரிமை விஷயத்தில் அமெ. - ரஷ்யா இணக்கம்

வாஷிங்டன், ஆக. 15

மனித உரிமை பற்றிய பேச்சுக்களை விஸ்தரிக்க அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இணக்கம் காணும் கட்டத்துக்கு வந்துவிட்டன என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிவித்தது.

இது சம்பந்தமான விளக்க அறிக்கை ஒன்றை இரண்டு அரசுகளும் தயாரித்து உள்ளன.

அரசியல் கைதிகளை விடுவிப்பது, அகிருப்தியாளர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பது, பெண்களின் அந்தஸ்து.

—ஆகிய விஷயங்கள் குறித்தே இரு நாடுகளும் ஆராய்ந்து வந்தன. (ஏ)

## தென் ஆபிரிக்கா:

# அதிபர் போத்தா ராஜினாமா; கிளெர்க் பதில் ஜனாதிபதி!

73 வயதான தென் ஆபிரிக்க ஜனாதிபதி திரு. பி. டபிள்யு. போத்தா ராஜினாமாச் செய்து விட்டார்.

திங்கள் நள்ளிரவு முதல் அவரது ராஜினாமா நடைமுறைக்கு வந்தது;

ஆளும் தேசியக்கட்சியின் தலைவரான திரு. எப். டபிள்யு டி. கிளெர்க் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாம்பியாவின் ஜனாதிபதி கென்னத் கவுண்டாவை சாம்பியா சென்று திரு. கிளெர்க் இம்மாதம் 28 ஆம் திகதி சந்திக்க இருக்கிறார்.

இதற்கு ஜனாதிபதி போத்தா எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

இது தொடர்பாக ஆளும் கட்சித் தலைமைப் பீடத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் எதிரொலியாக போத்தாவின் பதவி விலகல் அமைந்தது.

ஆளும் தேசியக்கட்சியின் 41 ஆண்டு கால சரித்திரத்தில் ஏற்பட்டிராத நெருக்கடியாக இது அமைந்தது. (ஏ)

## ● போபோஸ் பேர ஊழல் பற்றி:

# தூரதர்ஷனில் பகிரங்க விவாதம்;

# ராஜீவின் சவாலை வி.பி.சிங் ஏற்றார்

புதுடில்லி, ஆக 15

போபோர்ஸ் பேர ஊழல் பற்றி நேருக்கு நேர் தூரதர்ஷனில் விவாதிக்க வரும்படி ஜனதாதள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திரு. வி. பி. சிங்குக்கு பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த வாரம் சவால் விட்டிருந்தார்.

அச்சவாலை திரு. வி. பி. சிங் ஏற்று பிரதமர் காந்திக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

கடித விவரம் வருமாறு:

## முதல் விவாதம் ஆகஸ்ட் 28 இல்?

அன்புள்ள ராஜீவ் காந்தி.

தூரதர்ஷனில் நேருக்கு நேர் விவாதிக்க சவால் விட்டிருந்தது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

இச் சவாலை ஏற்றுக் கொள்கிறேன் விரைவில் நேருக்கு நேர் சந்திக்க ஆவலாக உளேன்

விவாதம் வெட்டு இன்றி நேரடியாக ஒளிபரப்பட வேண்டும்.

உங்களுக்கும் எனக்கும் இடையேயான விவாதமாக இது இருக்க வேண்டும் விவாதத்தை நடத்துவதற்குஎன்று நடுவர்கள் இருக்கக் கூடாது.

போபேர்ஸ் சம்பந்தமாக சகல கேள்விகளுக்கும் பதிலளிக்கும்வரை விவாதம் தொடர்ந்துஒளிபரப்பாக வேண்டும்;

இது போன்ற பகிரங்க விவாதங்களை நீர்மூழ்கிப்பேர ஊழல் வெஸ்ட்லண்ட் ஹெலிக்கொப்டர் ஊழல் ஆகிய விஷயங்களுக்கும் வைத்துக் கொள்ளலாம்.

ஆகவே முதலாவதாக போபேர்ஸ் பேர ஊழல் பகிரங்க விவாதத்தை இடமாதம் 28 ஆம் திகதி தூரதர்ஷனில் வைத்துக்கொள்ளலாம் என்று யோசனை கூறுகின்றேன்.

வி பி சிங்

இப்படி திரு சிங்கின் கடிதம் அமைந்துள்ளது. (ஏ)

## சார்க் உச்சிமாநாட்டில்:

# பிரதமர் பெனாஸிர் பூட்டோ கலந்துகொள்ளமாட்டார்

சார்க் அமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் பாகிஸ்தான் சார்பில் பிரதமர் பெனாஸிர்பூட்டோ கலந்து கொள்ள மாட்டார்.

பதிலாக அவரது தாயாரும் சிரேஷ்ட மத்திய அமைச்சருமான பேகம்நுஸ்ரத் பூட்டோவே கலந்து கொள்வார்.

இத் தகவலை பிரதமர் பெனாஸிரே பெஷாவாரில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்;

சார்க் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக இந்த அமைப்பின் நடப்புத் தலைவர் என்ற முறையில் அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளுக்கு பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் மேற்கொள்ள வேண்டியது சம்பிரதாயமாகும்.

அந்த விஜயத்தையும் பெனாஸிரின் அம்மா பேகம் நுஸ்ரத் பூட்டோவே மேற்கொள்ளுவார்.

பிரதமர் பெனாஸிர் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் உறவில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பெனாஸீர் அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது ஜனாதிபதிக்குப் பிடிக்கவில்லை: வலதுசாரிப் பத்திரிகைகளும் இதைக் கண்டித்து வருகின்றன.

இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் அணு ஆயுதத் திட்டங்கள் பற்றி இரகசிய உடன்பாடுகளை பெனாஸிர் செய்திருப்பதாகவும் குற்றஞ் சாட்டப் பட்டுள்ளது;

# கொன்ரு தலைவர்களுக்கு அமெரிக்கா புகலிடம்

மியாமி, ஆக. 15

கொன்ரு கெரில்லா அமைப்பின் முன்னணித் தலைவர்கள் 9 பேருக்கு அமெரிக்க அரசு அரசியல் தஞ்சமளித்தது.

கொன்ரு அமைப்பைக் கலைப்பது என்று மத்திய அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் முடிவு செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்: கொன்ரு அமைப்பைக் கலைக்கும் திட்டத்தின் கீழ் 12 ஆயிரம் கெரில்லாக்கள், ஒன்றில் நிக்கரகுவா திரும்பவேண்டும் அல்லது மூன்றாவது நாடு ஒன்றுக்குச் செல்ல வேண்டும். (ஏ)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Grant BUK&E PFL 1157


# கவிச் சக்கரவர்த்தியான கம்பனுக்கு

# சென்னையில் கோட்டம் நிறுவப்படும்

## கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஆக 15

சென்னையில் கம்பனுக்கும் ஒரு கோட்டம் நிறுவப்படும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார்.

சென்னை கம்பன் கழகம் நடத்திய மூன்று நாள் கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் கலைஞர் இதனை வெளியிட்டார் திரு கருணாநிதி மேலும் சொன்னதாவது;

வள்ளுவர் கோட்டம் அமைப்பில் கம்பனுக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படும்.

வறுமையின்றி அயோத்தி அன்று விளங்கியது. கம்பராமாயணம் இதைக் காட்டுகிறது கம்பன் கண்ட அந்த செழிப்பான சமுதாயத்தை உருவாக்க நாமும் இன்று திடசங்கற்பம் எடுக்க வேண்டும்.

கம்பனின் கற்பனை வளம், சொல்லாட்சி ஆகியன தமிழ் மொழிக்கு இன்றும் சிறப்புச் சேர்க்கிறது;

இராவணனின் பாத்திரத்தைச் சித்தரித்தவிதம் குறித்து கம்பனைப் பாராட்ட வேண்டும்; இராவணனின் வீரத்துக்கு. அவனது சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாது அவனின் வாழ்வையும் துக்ககரமான முடிவையும் கம்பன் எடுத்துக் காட்டியிருந்தார்;

இராவணனின் பெருமையை இழிவுபடுத்தும் போன வாதங்களுக்கு [illegible] யில் இருந்து இதனை நாம் நோக்க வேண்டும்.

இராமாயணத்தின் முக்கிய அம்சங்களில் வால்மீகியில் இருந்து கம்பன் முரண்பட்டு



கருணாநிதி

நிற்கிறார்;

சீதையைத் தமிழ்ப் பெண்ணாகவே தமிழ்க் கலாசாரத்தின் பிரதிபலிப்பாகவே கம்பன் காட்டியிருக்கிறார்;

வால்மீகியின் இராமாயணப்படி, இராமனுடன் காடு செல்ல சீதை மறுக்கிறாள்.

கம்பரின் இராமாயணப்படி, இராமன் வனவாசகத்துக்குப் புறப்படும் முன்னரே சீதை புறப்பட ஆயத்தமாகிறாள்;

[illegible] ஆடை, அணிகலன்களைத் துற[illegible] சீதை மறுப்பதாக வால்மீகி சித்தரிக்கிறார்.

ஆனால் இராமனுக்கு முன்னே மரவுரி தரித்து அணிந்துகாடு செல்லத் தயாராவதாக சீதையை கம்பர் காட்டுகிறார்.

அயோத்தியின் செழிப்பை, பெருமையைக் கம்பன் வர்ணிக்கும்போது காவேரிக்கரையோரத்தின் செழிப்பும் வளமையுமே கம்பனின் மனக்கண்ணில் தெரிந்திருக்கிறது

திருக்குறள், சங்க இலக்கியங்களில் உள்ள அரிய விஷயங்களை எல்லாம் கம்பன் தனது இலக்கியத்தில் பிரதிபலித்திருக்கிறார்.

தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளல் பற்றி பல இடங்களில் கம்பன் போற்றிப் பாடினார். அதனால்தான் திவ்வியப் பிரபந்தங்களில் ஒன்றாக கம்பராமாயணம் ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டது வருத்தத்திற்குரியது.

கம்பராமாயணத்தில் கடவுள்களைப் பிரதிபலிப்பதான பாத்திரப் படைப்புகள் அமைந்துள்ளது குறித்து நான் கருத்து வேறுபாடு கொண்டிருக்கலாம்.

ஆனால் நானோ அல்லது எனது குருவான பேரறிஞர் அண்ணாவோ கம்பனின் கவித்துவத் திறமையில் என்றுமே ஐயப்பாடு கொண்டதில்லை; கம்பன் ஒரு கவி மேதையே;

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார்; (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ இரண்டாவது ★ பிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வி க. உதயதர்ஷனி ★

தொல்புரம் ஆதிமுத்து மாரி அம்மன் துணையோடு தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (16-08-89) வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவர் தொல்புரத்தில் உள்ள (அப்பா) கந்தசாமி (சாமி), புனிதவதியின் (பாப்பா) ஏக புத்திரியுமாவார். இவரை தொல்புரத்தில் இருக்கும் அப்பப்பா, அம்மப்பா சாவகச்சேரியில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

(1613)

## 50 ஆவது நாள் நினைவஞ்சலி



அமரர்

### திரு. கந்தையா குலேந்திரா

உதவி அரசாங்க அதிபரும், வலி கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர்

தோற்றம்; 02 - 11 - 1939

மறைவு: 28 - 06 - 1989

(1) மாசிலா மணியாய் வரையிலா நிறையாய்
காசிலாக்குணனாய் கறையிலா நிலவாய்
தேசெலாம் போற்று சீர்த்திப் பெருமையாய்ப்
பேசிட வாழ்ந்த பெருமையன் ஆனாய்

(2) அன்பினை அள்ளி அமுதென அருந்தவும்
என்பினை உருக்கும் இன்மொழி பேசியும்
துன்பமே இன்றிச் சுகமாய் வாழவும்
மன்பதை வாழ வாழ்ந்து காட்டினை

(3) அப்பா என்றே பதறித் துடித்திட
செப்படி வித்தை காட்டி மறைந்தாய்
எப்படி நின்னை மறந்திட முடியும்?
இப்புவி எம் துயர் தீர்ந்திடுமோ?

மனைவி, மகன்,
தாய், சகோதர, சகோதரிகள்.

'ஈஸ்வரி வாசா'
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில்;

[1536]

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



### கனகரத்தினம் சிவசப்பு

மலர்வு: 22 - 3 - 1905

உதிர்வு: 6 - 7 - 1989

குணமகனே எங்கள் குடும்பத்தின் தலைவனே
பண்புள்ளவரே அன்பின் உறைவிடமே
எங்கள் குடும்ப ஒளிவிளக்கே — உங்கள்
ஆத்ம சாந்திக்காக இறைவனை கண்ணீர்
பூக்கள் தூவி வேண்டுகின்றோம்:

அன்புக்குரிய மனைவி,
மகள், பேரன்.

''ஈஸ்வரி வாசா''
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில்;

(1535)

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

16 - 08 - 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## கோவில்குளம் பகுதியில் 8பேர்கைது; 2லொறிகள் மீட்பு

### ஸ்ரீலங்கா சிப்பாய்கள் நடவடிக்கை

வவுனியா, ஆக 16

கடந்தசனிக்கிழமைகோவில் குளம் பகுதிக்குச் சென்ற இலங்கைஇராணுவத்தினர் அங்கு பலரைக் கைதுசெய்து விசாரணைக்கு உள்ளாக்கினார்கள்: இப்பகுதியிலிருந்து இரண்டு லொறிகளையும் அவர்கள் மீட்டுள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சிய எட்டுப்பேரையும் லொறிகளையும் இராணுவத்தினர் இலங்கைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்:

இவர்களில் ஐவர் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் —

எஞ்சிய மூவரும் சந்தேகத்தின்பேரில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது:

இவர்களின் கைது தொடர்பாக இந்திய அமைதிப்படையிடம் புகார்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-164)

## துன்னாலைப் பகுதியில் இரு புதிய முகாம்கள்

### நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல்

பருத்தித்துறை, ஆக 16

துன்னாலைப் பகுதியில் மேலும் புதிய இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வல்லிபுரக் கோயில் பகுதியில் மீண்டும் நேற்றுக் காலை பிரஸ்தாப முகாம் அமைக்கப்பட்டது.

மாய்க்கிரான் பகுதியிலும் நேற்று முன்தினம் முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் கட்டப்பட்ட வீடுகளிலேயே படையினர் முகாமிட்டனர்.

மாய்க்கிரான் முகாம் அமைக்கப்பட்ட அன்றே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன. சிலர் முகாமை நோக்கித் தாக்குதல் நடத்தியதை அடுத்தே ஷெல் தாக்குதல் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டன:

யினும் நேற்றுக் காலை இப்பகுதியூடாக போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்பட்டது: (ஒ-118-144)

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்:

## எழுத்துப் பரீட்சை 26ஆம் திகதி நடக்கலாம்

யாழ்ப்பாணம், ஆக 16

பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்கான போட்டிப் (எழுத்துப்) பரீட்சை அகில இலங்கையிலும் இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது:

பிரஸ்தாப போட்டிப் பரீட்சையை நேற்று (15ஆம் திகதி) நடாத்தி பின் நேர்முகப் பரீட்சைகளை நடாத்த ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டிருந்தது, ஆனால் கொழும்பில் சில உட்தடங்கல்கள் காரணமாகத் திட்டமிட்டபடி பரீட்சையை நடத்தமுடியாமற் போயிற்றும்:

எழுத்துப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அனேகமாக எதிர்வரும் 22ஆம் திகதி சகல கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்று சமீபத்தில் கொழும்பு சென்றிருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனராம்:

26ஆம் திகதி பரீட்சைநடைபெறும் பட்சத்தில் விடைத்தாள்களை 27ஆம் திகதியே திருத்திமுடிக்கும்படியும், 1ஆம் திகதி நியமனக் கடிதங்களை வழங்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது: (அ-3-9)

## நேர்முகப் பரீட்சை நாளை வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா ஆக, 16

வவுனியா மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை வியாழக்கிழமை முதல் ஒரு வாரகாலம் நடைபெறும் என கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 300 வெற்றிடங்களுக்கு ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்:

இவ் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியானவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டன.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோருக்கு எதிர் வரும் 26 ஆம் திகதி வவுனியாவில் எழுத்துப்பரீட்சை நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், வவுனியா மகளிர் மகாவித்தியாலயம், சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகிய மூன்று நிலையங்களில் எழுத்துப் பரீட்சை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-164)

பஸ் நிலையம் முன்பாக
மின்சாரம் இல்லாத வேளையிலும்
ஜெனரேட்டர் உதவியுடன்
★ போட்டோஸ்ரட் ★
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள
சன்லைற் றைக்கிளீனர்ஸ்
யாழ்ப்பாணம்.
[C/3292]

## மஞ்சத் திருவிழா உள்வீதி உலா

யாழ்ப்பாணம். ஆக 16

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத் தொடரில் நேற்று இடம்பெற்ற மஞ்சத்திருவிழாவைக் காண ஏராளமான பக்தர்கள் கூடினார்கள்.

நேற்றுக் காலையில் இருந்தே சிறிது சிறிதாக மழைபெய்த போதும் பக்தர்கள் நனைந்தவாறு கோவிலுக்கு வந்தனர்.

வழமையைவிட பெருந்தொகையான பக்தர்கள் வெளியூர்களில் இருந்து வந்த போதிலும் முருகப் பெருமான் வெளி வீதி உலா வரவில்லை:

நேற்றுத் தொண்டர்சேவைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. (அ-3)

## பண்டத்தரிப்பில் இளைஞர் சடலம்

பண்டத்தரிப்பு, ஆக 16

பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் இளைஞர்ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

அவரின் தலையில் சூட்டுக் காயம் இருந்தது:

கொலையுண்டவர் வடலியடைப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் நந்தகுமார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ.120)

## கலைமாணி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஆக 16

யாழ் பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சை முடிவுகள் நேற்றுப் பிற்பகல் வெளியிடப்பட்டன.

இப் பரீட்சை முடிவு காரணமாக நேற்றுப் பல்கலைக்கழக மாணவர்கள் குதூகலமாகக் காணப்பட்டனர். (அ-ரி)

## படையினர் இருவர் காயம்

வல்வெட்டித்துறை, ஆக 16

வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

வன்னிச்சி கோயிலடியில் நடைபெற்ற மேற்படி தாக்குதல் சம்பவத்தில் இருபடையினர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது: (ஒ-169)

## முச்சக்கர வண்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களினால் பாதிப்புற்றோரில் தெரிவு செய்யப்படும் சிலருக்கு இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் சர்வோதய அலுவலகத்தில் வைத்து முச்சக்கர வண்டிகளும், ஜெய்ப்பூர் உறுப்புகளும் வழங்கப்பட இருக்கின்றன:

ஏற்கனவே விண்ணப்பித்தோரில் தெரிவாகும் குறிப்பிட்ட சிலருக்கு இவை வழங்கப்படும். (ஜ)

## முல்லைத்தீவு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுச் சத்தங்கள் கேட்டன. ஷெல் வீச்சுக்களும் இடைவிடாது இடம்பெற்றன: அதனால் பீதியடைந்த மக்கள் சிதறிஓடினர்: கடைகள் மூடப்பட்டன:

இச்சம்பவத்தில் ஷெல் வீச்சுக்கு இலக்காகிக் காயமுற்ற இருவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். சிவராமலிங்கம் மகாலட்சுமி (28 வயது) செல்லத்துரை சுப்பிரமணியம் (65 வயது) ஆகிய அந்த இருவரும் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்: (அ-92)

## பண்டிதமணி நினைவு விழா ஞாயிறன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், ஆக 16

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நினைவுதின விழா எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது:

முதலில் யாழ். பல்கலைக்கழக பரமேசுவரன் ஆலயத்தில் விசேஷ பூசை நடைபெற்று பண்டிதமணியின் செந்தமிழ் களஞ்சியம் நூலும், நினைவு மலரும் கைலாசபதி அரங்கிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்:

இரு அரங்குகளாக இவ் விழா நடைபெற இருக்கிறது: முதலாவது அரங்குக்கு பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களும், இரண்டாவது அரங்குக்கு பேராசிரியர் அ. சண்முகதாசும் தலைமை வகிப்பார்கள்:

செந்தமிழ் களஞ்சியம் நூலை திரு. சு. இராசநாயகம் வெளியிட்டு வைக்க பேராசிரியர் கா. சிவத்தம்பி விமரிசன உரை நிகழ்த்துவார்: பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்துவார்:

நினைவு மலரை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு வைக்க கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் விமரிசன உரை ஆற்றுவார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பண்டிதமணியின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார். நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திரு. நம. சிவப்பிரகாசம் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள், அத்துடன் அறிஞர்களின் பிரார்த்தனை உரையும், கவிதாஞ்சலியும் இடம்பெறும்: (இ-3)

## 2 குழுக்கள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப்படை விலகியதை அடுத்து அந்தப் பகுதிகளில் புதிதாக வன்செயல்கள் தலைதூக்காமல் பார்த்துக்கொள்ளப்படவேண்டும். இதனைக் கவனத்தில் கொண்டே படைவிலகல் தொடர்பான அட்டவணை தயாரிக்கப்படும் என இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை அமைதிப்படையினர் ஒரு பகுதியிலிருந்து விலகியபின்னர், அந்தப் பகுதிகளுக்கு அவர்கள் திரும்பிப் போவது என்பது நடைபெறாது என இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன: (உ:எ)

## ஹர்த்தால் அனுஷ்டிப்பு

புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது:

வாகனப் போக்குவரத்தும் மிகக் குறைந்து காணப்பட்டது: (ஒ-92)

## அதிகாரப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் உட்பட வேறு உயர் அதிகாரிகளையும் நான் சந்தித்தேன்:

அதிகாரப் பரவலாக்கல், தமிழ் மக்களின் பாதுகாப்பு ஆகியவை பற்றி மிகத் தெளிவாகவும், விரிவாகவும் நான் அவர்களுக்கு எடுத்து விளக்கினேன்:

ஒப்பந்தத்தில் கூறப்பட்டது போன்று தமிழ் மக்களின் பாதுகாப்புப் பற்றிய நிலையில் இந்தியா மிக உறுதியாக இருக்கின்றது:

அதிகாரங்களை வழங்குவதில் இலங்கை அரசு காட்டும் அசமந்த போக்கு பற்றி நான் அவர்களுக்கு விளக்கியுள்ளேன்; இதனால் மாகாண அரசுக்கு ஏற்பட்டுவரும் முட்டுக்கட்டைகள் பற்றியும் விளக்கினேன்:

எங்களைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கில் சமாதானம் நிலவி ஜனநாயக முறைகள் செயற்படுத்தப்பட வேண்டும். இவை இரண்டையும் உறுதி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை நாங்கள் எப்போதும் வரவேற்போம்- என்றார். (உ-150)

## தென்பகுதி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரவாதிகள்என்ற சந்தேகத்தின் பேரில் 105 பேர் மட்டுமே தடுத்துவைக்கப்பட்டனர்.

★ குளியாப்பிட்டி மாவட்டத்தில் 457 பேர் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் 300 பேர் விடுவிக்கப்பட்டனர்.

★ வவுனியா மாவட்டத்தில் தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்; அவர்களில் மூவர் பௌத்த பிக்கு வேடத்தில் காணப்பட்டனர்: (ஒ-எ)

## காமினி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்ததாகவும் நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன:

திரு. காமினி திஸாநாயக்காவுக்கு முக்கிய பதவியைக் கொடுத்தால் இந்தியாவுடனான உறவைச் சீர்செய்வது இலகுவாக இருக்கும் என்று முன்னர் ஜனாதிபதி கருதியதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன: (உ-5)

## வல்வைப் பகுதிகளுக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டனர்.

வழமைபோல் ரோந்து சென்ற இந்திய அமைதிப்படையினர் மீது மக்கள் செறிந்து வாழும், தொடர் கட்டடத்தொகுதிகள் அடங்கிய பகுதியிலிருந்து தாக்குதல் தொடுத்தமையால், அவர்களும் திருப்பி தாக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது: இதனால் இம்மோதல்களின் மத்தியில் சிக்கிய அப்பாவி மக்களில் சிலர் மரணமடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது:

இம் மோதலில் இந்திய அமைதிப்படையினருக்கெதிராக பாவிக்கப்பட்ட எரிகுண்டுகள் வெடித்தமையாலேயே அப்பகுதியில் தீ பரவி தொடர் கட்டடங்களையும் தாக்கியது: இத் தீயினால் ஏற்பட்ட விபரீதமே சில வீடுகளை எரித்தும் கட்டடங்களை சேதமடையவும் செய்துள்ளது. எரிந்த வீடுகளையும் கட்டடங்களையும் முதலமைச்சரும் சக அதிகாரிகளும் நடந்து சென்று பார்வையிட்டனர்.

ஆயுதம் தாங்கிய குழுவினரிடம் இருந்தும், மக்களை தாக்க வைக்கும் தந்திரோபாய நோக்குடன் அமைதிப்படை மீது தாக்குதல் நடாத்தும் சந்தர்ப்பங்களிலும் மக்களின் நலன்களை பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்துமாறு இந்திய அமைதிப்படை அதிகாரிகளை முதல்வர் வேண்டிக் கொண்டார்:

பாதிக்கப்பட்ட சகல தரப்பு மக்களுக்கும் வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளருக்கு முதலமைச்சர் பணிப்புரை வழங்கியதோடு பலாத்காரமாக வீடுகளை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கபட்ட மக்களுக்கு சகல உதவிகளும் வழங்கி மீள குடியமர்த்துவதற்கு ஒத்தாசை புரியுமாறு அமைதிப்படை அதிகாரிகளை முதலமைச்சர் வேண்டிக் கொண்டார்: (உ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. கந்தையா தணிகாசலம்

(ஒய்வுபெற்ற பிரதம களஞ்சியப் பொறுப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் — இணைச் செயலாளர், நிர்வாக சபை, துர்க்காதேவி தேவஸ்தானம்)

தெல்லிப்பளையைச் சேர்ந்த க. தணிகாசலம் அவர்கள் 15-08-1989 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்:

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நந்தினி (ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி), நந்தகுமார் (அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்). சிவகுமார் (O B C.C., ஓமான்), நளாயினி (நிதிக் கிளை, யாழ். பல்கலைக் கழகம்), குமரன் தணிகாசலம் (Harlton Overseas Corporation), விஜயகுமார் (சுவிற்சிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. கமலநாதன் (Gobal Construction Mills), யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹஜனன், திரியம்பகம் ஆகியோரின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற க. சரவணமுத்து, திருமதி தங்கம்மா விஜயரட்ணம், காலஞ்சென்ற திருமதி வேதநாயகி துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் தெல்லிப்பளையில் உள்ள அவரது இல்லத்தில் 16-08-1989 புதன்கிழமை இன்று பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். உற்றார். உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பளை,

நந்தகுமார்
(1532)

### திருமதி நாகம்மா சிவக்கொழுந்து

திருமதி நாகம்மா சிவக்கொழுந்து அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், மதியாபரணம், கனகரட்ணம் (சின்ன வெள்ளை), காலஞ்சென்ற கமலராசா (U. K.), தனபாலசிங்கம் (U. K.), பரமேஸ்வரன் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்;

16-08-1989 புதன்கிழமை இன்று காலை 10-00 மணிக்கு இராமலிங்கம் வீதி, முடமாவடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்:

தகவல்:

முடமாவடி; (1530) சி. மதியாபரணம்

### திரு. வேலுப்பிள்ளை கந்தையா

(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை கந்தையா காலமானார்;

அன்னார் திரு. திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும், வைகுந்தராசா (மண்டைதீவு, பிரபல புகையிலை வியாபாரி), வைபோகராசா (வைலஜா ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), சச்சிதானந்த சிவலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், தையல்நாயகி, பேரின்பநாயகம் (குணம்), சகுந்தலாதேவி ஆகியோரின் அருமை மாமனாரும், ரஜனிகாந்த், சசிகாந்த், வைலஜா, ஹிந்துஜா, கஜிதா, உபேந்திரன், உஷாங்கன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 16-08-89 இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு மண்டைதீவு தெற்கு மயானத்தில் நடைபெறும்:

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
வைபோகராசா.

மண்டைதீவு; (1612)

### திரு. வி. கணபதிப்பிள்ளை

(Retired Officer, Bank of Ceylon)

இலங்கை வங்கி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. வி. கணபதிப்பிள்ளை அவர்களின் இறுதிச் சடங்குகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு திருநெல்வேலி வடக்கு, கொக்குவில் ரோட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
திருமதி கணபதிப்பிள்ளை.

கொக்குவில் ரோட்,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி; (சி/3224)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org